1973 டிசம்பர் 4]

Rural Engineering Survey.

* 614 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Works with reference to question No. 80 answered on 11th August 1973 be pleased to state—

(a) the details of works so far carried out under the Centrally Sponsored Scheme of Rural Engineering Survey in Ramanathapuram and Madurai districts ; and

(b) the results achieved thereby ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இதற்காக மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா? அப்படியானுல் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தனிக் கேள்வி வேண்டும். *

டெலிவிஷன் செட்டுகள் உற்பத்தி

* 615 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் 7—12—1972-ல், 72 ஆம் எண் வினுவிற்கு அளித்த விடையையொட்டி, தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூட்டுத்துறையில் டெலிவிஷன் செட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: "டெலிவிஷன் செட்டுகள்" உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அடையாறிலுள்ள இன்ஸ்ட்ரானிக் காம்பஸ் என்னுமிடத்தில் டைனுவிசன் என்ற நிறுவனத்தால் கூட்டுத்துறையில் நிறுவப்படும். மேற்படி நிறுவனம் விரைவில் செயல்படுத்துவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறது. 1974-ம் ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

@ 833-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

* 639-ம் பக்கத்தில் மாண்புமிகு அமைச்சரவர்களால்.
இத் துணை வினுவிற்கு விடை அளிக்கப்பட்டுள்ளதைக் காண்கவும்.